தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஹேவிளம்பி, மார்கழி 25, திருவள்ளுவர் ஆண்டு 2048

2018 ஜனவரி 9, செவ்வாய்க்கிழமை

சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. ப. தனபால்** *அவர்கள் தலைமையில் காலை 10–00 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

“அஞ்சாமை அல்லால் துணைவேண்டா எஞ்சாமை
எண்ணி இடத்தால் செயின்.”

செய்ய வேண்டிய செயல்கள் பற்றி நன்றாகச் சிந்தித்து தக்க இடம் அறிந்து செய்தால் அதில் வெற்றி பெறுவதற்கு மன உறுதி என்னும் துணிவு தவிர வேறு துணை வேண்டாம்.

1. இரங்கற்குறிப்புகள்

முன்னாள் உறுப்பினர்கள் மறைவு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை முன்னாள் உறுப்பினர்களான திரு. கா. சுப்ரவேலு அவர்கள் 16–7–2017 அன்றும், திரு. சா. ஞானசுந்தரம் அவர்கள் 25–7–2017 அன்றும், திரு. கோ. சாது செல்வராஜ் அவர்கள் 18–8–2017 அன்றும், திரு. கே.வி. இராமசாமி அவர்கள் 25–8–2017 அன்றும், திரு. இரா. கருப்பையா அவர்கள் 22–9–2017 அன்றும், திரு. கே.பி. நாகராஜன் அவர்கள் 9–11–2017 அன்றும், திரு. க. நரசிம்ம பல்லவன் அவர்கள் 14–11–2017 அன்றும், திரு. எம்.வி.ஆர். வீரகபிலன் அவர்கள் 17–11–2017 அன்றும், திரு. குழ. செல்லையா அவர்கள் 23–11–2017 அன்றும், டாக்டர் ப. வள்ளல் பெருமான் அவர்கள் 28–11–2017 அன்றும், திரு. கே.பி. மணிவாசகம் அவர்கள் 28–11–2017 அன்றும் மற்றும் திரு. ரா. மார்க்கபந்து அவர்கள் 28–12–2017 அன்றும் மறைவுற்ற செய்தியினை இப்பேரவைக்கு வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறேன்.*

திரு. கா. சுப்ரவேலு அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் சீர்காழி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத்

தேர்ந்தெடுக்கப்பட்டு நல்ல முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1967–1971 மற்றும் 1971–1977 ஆகிய ஆண்டுகளில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்கள்.

திரு. சா. ஞானசுந்தரம் அவர்கள் 1985–1988 ஆம் ஆண்டுகளில் மன்னார்குடி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. கோ. சாது செல்வராஜ் அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் ஸ்ரீவைகுண்டம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்கள்.

திரு. கே.வி. இராமசாமி அவர்கள் 1989–1991 ஆம் ஆண்டுகளில் கரூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு பாராட்டத்தக்க வகையில் பணியாற்றினார்கள்.

திரு. இரா. கருப்பையா அவர்கள் 1980–1984 ஆம் ஆண்டுகளில் குளித்தலை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சீரிய முறையில் பணியாற்றினார்கள்.

திரு. கே.பி. நாகராஜன் அவர்கள் 2011–2016 ஆம் ஆண்டுகளில் மயிலம் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பான முறையில் பணியாற்றினார்கள்.

திரு. க. நரசிம்ம பல்லவன் அவர்கள் 1985–1988 ஆம் ஆண்டுகளில் உத்திரமேரூர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள்.

திரு. எம்.வி.ஆர். வீரகபிலன் அவர்கள் 2006–2011 ஆம் ஆண்டுகளில் பேராவூரணி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு சிறந்த முறையில் பணியாற்றினார்கள்.

திரு. குழ. செல்லையா அவர்கள் 1971–1976 ஆம் ஆண்டுகளில் பேராவூரணி தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு நன்கு பணியாற்றினார்கள்.

2018 ஜனவரி 9] [பேரவைத் தலைவர்]

டாக்டர் ப. வள்ளல் பெருமான் அவர்கள் 2001–2006 ஆம் ஆண்டுகளில் காட்டுமன்னார்கோவில் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு திறம்படப் பணியாற்றினார்கள். மேலும், 1984–1989, 1989–1991 மற்றும் 1991–1996 ஆகிய ஆண்டுகளில் நாடாளுமன்ற உறுப்பினராகவும் பணியாற்றினார்கள்.

முற்பகல் 10–05

திரு. கே.பி. மணிவாசகம் அவர்கள் 1991–1996 ஆம் ஆண்டுகளில் உடுமலைப்பேட்டை தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றினார்கள்.

திரு. ரா. மார்க்கபந்து அவர்கள் 1977–1980 ஆம் ஆண்டுகளில் அணைக்கட்டு தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு, சிறந்த முறையில் பணியாற்றினார்கள். மேலும், 1995 முதல் 2001 ஆம் ஆண்டு வரையில் மாநிலங்களவை உறுப்பினராகவும் பணியாற்றினார்கள்.

இம்முன்னாள் உறுப்பினர்களது மறைவால் அவர்களைப் பிரிந்து வருந்தும் அவர்தம் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் இப்பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மறைந்த இப்பெருந்தகைகளுக்கு மரியாதை செலுத்தும் வகையில், மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று, இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்.)

2. இரங்கல் தீர்மானம்

ஒகி புயலால் ஏற்பட்ட உயிரிழப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *29–11–2017 மற்றும் 30–11–2017 ஆகிய நாட்களில் கன்னியாகுமரி, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களை பலத்த மழையுடன் ஒகி புயல் கடும் சீற்றத்துடன் தாக்கியதில், மிக கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டது குறித்தும், குறிப்பாக கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த மீனவர்கள்,*